**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**
**கொழும்பு**
*******

**ஊடக அறிக்கை**

**கண்டி, புசல்லாவை சரஸ்வதி மத்திய கல்லூரி புனர்நிர்மாணத்திற்கு இந்தியா உதவுகிறது**
**புதிய கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது**

கண்டி மாவட்டத்தின் புசல்லாவையிலுள்ள சரஸ்வதி மத்திய கல்லூரியில் புதிய கட்டிட நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்கு அடிக்கல் நாட்டும் ஒரு விசேட வைபவம் 10 ஆகஸ்ட் 2018 அன்று நடைபெற்றது. இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் தரண்ஜித் சிங் சந்து அவர்களுடன் இணைந்து கௌரவ கல்வி ராஜாங்க அமைச்சர் திரு.வி.ராதாகிருஷ்ணன் மற்றும் மத்திய மாகாண விவசாய மற்றும் தமிழ்க் கல்வி அமைச்சர் திரு.எம். ராமேஸ்வரன் ஆகியோரால் அடிக்கல் நாட்டப்பட்டது.

கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்கள், மத்திய மாகாண சபையின் கௌரவ உறுப்பினர்கள் பலரும், கல்லூரியின் அதிபர் மற்றும் ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

கல்லூரியின் புனர்நிர்மாணம் இந்திய அரசாங்கத்திடமிருந்தான நன்கொடை 96 மில்லியன் இலங்கை ரூபாய்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படுகிறது. புதிய கட்டிடம் விஞ்ஞான ஆய்வு கூடங்கள், விரிவுரை மண்டபங்கள் மற்றும் ஆசிரியர் விடுதிகள் என்பவற்றை கொண்டிருக்கும். அத்தோடு இந்தத் திட்டம் மதிற் சுவர்கள், தாங்கு சுவர்கள் உட்பட தற்போதுள்ள கட்டிடத்தின் திருத்த வேலைகள் மற்றும் சீரமைத்தல்; அலுவலகம் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உபகரணம், தளபாடங்கள் அதே போன்று கல்லூரி மைதானத்தின் முழுமையான புனர்நிர்மாணம் போன்றவற்றையும் உள்ளடக்கியதாக இருக்கும்.

இந்த செயற்றிட்டம், இலங்கை மாணவர்கள் இலங்கை மற்றும் இந்தியாவில் தங்களது கல்விகளைத் தொடர்வதற்காக புலமைப் பரிசில்களை வழங்குவதற்கும் அப்பால், விசேடமாக கல்வித் துறையில் கல்வி பாடசாலைகளின் நிர்மாணம் மற்றும் மேம்படுத்துதல் உட்பட, பாடசாலைகளுக்கு தகவல் தொழில்நுட்பம் மற்றும் விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்களை வழங்குதல், ஆங்கில மொழி மற்றும் ஏனைய பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஒழுங்குபடுத்தல் போன்ற மக்கள் குறித்தான அபிவிருத்திச் செயல்திட்டங்களில் இலங்கை அரசாங்கத்துடன் பங்குடமையாளராகுவதற்கான இந்திய அரசாங்கத்தின் முயற்சிகளின் ஒரு தொடர்ச்சியாக உள்ளது. இலங்கைக்கான அபிவிருத்தி உதவிகளின் இந்தியாவின் மொத்தப் பற்றுறுதி US$ 3 பில்லியன்களாகும், இதில் US$ 550 ஆனவை தனியே நன்கொடை ரீதியிலான உதவிகளாகும்.

*** * * * ***

**கொழும்பு**
**ஆகஸ்ட் 10, 2018**